<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

<u>அசல் வழக்கு எண். 70/2024</u>

பெயர் : சுந்தரி P.W.1. Cross

க/பெ. : லெட்சுமணன்

தேதி : 26.03.2026

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> –

1. தாவா சொத்தகள் அனைத்தும் லெட்சுமணனுக்கு சொந்தமானது என்றால் சரிதான். லெட்சுமணனின் முதல் மனைவி பெயர் கோமதி ஆகும். கோமதி இறந்த பிறகு தான் லெட்சுமணன் என்னை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி சுஜா லெட்சுமணன் மற்றும் கோமதிக்கு பிறந்த மகள் என்றால் சரிதான். இவ்வழக்கின் 5 முதல் 7 பிரதிவாதிகள் எனக்கும் லெட்சுமணனுக்கும் பிறந்தவர்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் எனக்கும் 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கும் 1/6 பங்கு பாகபத்திய உரிமை உள்ளது என்றால் சரிதான். 4 முதல் 7 பிரதிவாதிகளுக்குரிய தலா 1/6 பாகம் கூடுதல் 4/6 பாகத்தை பிரித்து கொடுப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.

2. 8ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் சகோதரர் என்றால் சரிதான். 8ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணமானது கோமதி என்பவரின் இறப்பு சான்றிதழ் என்றால் சரிதான். அந்த இறப்பு சான்றிதழின் அசல் **பிவாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.